பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
19 10 2025 SUNDAY 6 45 AM
<u>வணக்கம்-மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு நடவடிக்கை, நுகர்வோரை சென்றவடைவது உறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- உள்ளூர் தயாரிப்புகளுக்கு மக்கள் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.
- வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.
- தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் அடுத்த இரண்டு நாட்களில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு நடவடிக்கை நுகர்வோரை சென்றவடைவது உறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரி கட்டமைப்பு இரண்டு நிலைகளாக குறைக்கப்பட்டுள்ளது மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட இணக்க நடைமுறைகள், பொருட்களை வகைப்படுத்துதல் தொடர்பான சிக்கல்கள் ஆகியவற்றுக்கு தீர்வு காணும் வகையில், இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இந்த சீர்திருத்த நடவடிக்கைகள், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்றும், மின்னணு சாதனங்கள், வாகனங்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்களின் விற்பனை அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

திருத்தப்பட்ட ஜிஎஸ்டி விகிதங்களின் நன்மைகள் மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் நிதி அமைச்சகம் 54 பொருட்களின் விலைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

>>>>><<<<<

உள்ளூர் தயாரிப்புகளுக்கு மக்கள் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பண்டிகை காலங்களில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்குவதில் மக்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தீபாவளி பண்டிகையை ஒட்டி, மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள அவர், இந்த நன்னாளில் அனைவருக்கும் உடல் நலம், வளமை மற்றும் மகிழ்ச்சி பெருகட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் நல்லாட்சி மலர்ந்திடும் என்று டாக்டர் எல்.முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். மழை வெள்ளம் போன்ற இயற்கை பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

மழைக்காலங்களில் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ஆண்டு தோறும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

>>>>><<<<<

நிலவின் மேற்பரப்பில் சூரிய கதிர்களால் ஏற்படும் தாக்கம் குறித்து சந்திரயான்-2 விண்கலத்தில் உள்ள கருவிகள் பதிவு செய்து, தகவல் அனுப்பியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, இஸ்ரோ வெளியிட்டுள்ள அறிக்கையில், 2019ஆம் ஆண்டு ஜூலை 22ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து GSLV ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட இந்த விண்கலம், நிலவின் சுற்றுவட்டப் பாதையில் தொடர்ந்து செயல்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மகளிர் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு திறன் மேம்பாட்டு பயிற்சி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இது, மகளிரை தொழில் முனைவோராக உருவாக்குவதுடன் பொருளாதார ரீதியாக தன்னிறைவு பெறவும் வழிவகுக்கிறது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் இந்த பயிற்சி தங்களுக்கு மிகுந்த பயனளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – பெண்கள் 45 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் அடுத்த இரண்டு நாட்களில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதையடுத்து, கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – ராஜசேகரன் 40 செகண்ட்ஸ்)

தொடர்மழை காரணமாக விழுப்புரம் மாவட்டத்தின் வீடூர் அணை முழுக் கொள்ளளவை எட்டவுள்ளதை அடுத்து. வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் – சுரேஷ் 30 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*இருவரிச் செய்திகள்*

*ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலுக்கு பாகிஸ்தான் அரசே காரணம் என்று ஆப்கான் பிரதமர் திரு. Mulla Mohammad Hassan Akhund குற்றம் சாட்டியுள்ளார்.*

*>>>>><<<<<*

*இந்தியா – இலங்கை இடையே, வர்த்ததம், கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூர்யா தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*Kalmykia குடியரசில் புத்தரின் புனித நினைவுச் சின்னங்களை காட்சிப்படுத்துவது இந்தியா – ரஷ்யா இடையேயான உறவுகளை வலுப்படுத்தும் என்று ஜம்மு கஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*இந்தியாவின் கலாச்சார மற்றும் ஆன்மிக மையமாக திகழும் அயோத்தியில் உள்ள புனித சரயு நதிக்கரையில் தீபத்திருவிழா இன்று நடைபெறுகிறது.*

*>>>>><<<<<*

*ரயில்வே குறித்து தவறான வீடியோ பதிவுகளைப் பகிரும் சமூக ஊடகங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரயில்வே எச்சரித்துள்ளது.*

*>>>>><<<<<*

*மகாராஷ்டிரா மாநிலம், நந்தூர்பார் மாவட்டம், தலோடா பகுதியில் ஏற்பட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.*

*>>>>><<<<<*

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்களை ஆட்சியர் திருமதி. சிவ சௌந்தரவள்ளி வழங்கினார்.

>>>>><<<<<

தூத்துக்குடி துறைமுகத்தில் சீனாவிலிருந்து கடத்தி வரப்பட்ட 5 கோடி ரூபாய் மதிப்பிலான தடை செய்யப்பட்ட பட்டாசுகளை மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவினர் பறிமுதல் செய்தனர்.

>>>>><<<<<

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் மகாத்மா காந்தியடிகளின் போதனைகளை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற பேரணியில் 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இந்தூரில் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பெர்த்தில் நடைபெறும் இப்போட்டி, காலை 9 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

மலேசியாவில் நடைபெற்று வரும் ஜோஹர் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<